தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பருவமழை குறைய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

**புது தில்லி,**

இந்த ஆண்டு வழக்கத்துக்கு குறைவான அளவே பருவமழை இருக்கும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடல்நீர் வெப்பம் தொடர்பான எல்-நினோ மாற்றத்தால், மழை குறைய வாய்ப்பு உள்ளதாகவும், மழையின் அளவு 95 சதவீதமோ, அதற்கு 5 சதவீதம் அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

90-96 சதவீத மழைப்பொழிவு வழக்கத்தை விட குறைவான அளவாகவும், 96-104 சதவீத மழைப்பொழிவு வழக்கமான மழைப்பொழிவாகவும் குறிப்பிடப்படுகிறது. கடந்த ஆண்டு பருவமழையை வானிலை ஆய்வு மையம் 98 சதவீதமாக கணித்திருந்த நிலையில், மழைப்பொழிவு 106 சதவீதமாக இருந்தது.

### காய்கறிகள், கனிகள் சாகுபடி கருத்தரங்கு

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி அருகே உள்ள மூங்கில்புதூர் கிராமத்தில் கிரீன் ஸ்டார் உர நிறுவனத்தின் சார்பில் லாபம் தரும் காய்கறிகள், கனிகள் சாகுபடி கருத்தரங்கு மற்றும் ஸ்பிக் சுரபி வயல் விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் ஜி.ஆர்.லோகாபிராம் தலைமை வகித்தார். மண்பரிசோதனை செய்து தேவைக்கு ஏற்ப உரமிடுவதுடன், தண்ணீரில் கலந்து தெளிக்கும் உரங்களைப் பயன்படுத்துவது. காய்கறிகள், கனிகள் சாகுபடியில் அதிக லாபம் பெற கடைப்பிடிக்க வேண்டிய முறைகள், பயிர் சாகுபடியில் கரும்பு, நெல், நிலக்கடலை, காய்கறி பயிர்களின் எண்ணிக்கையை

பராமரிப்பது குறித்து கிரீன் ஸ்டார் உர நிறுவன மண்டல மேலாளர் வி.எஸ்.அருணாசலம், தொழில் நுட்ப ஆலோசகர் கோ.தியாகராஜன் ஆகியோர் எடுத்துக் கூறினர்.

ஸ்பிக் சுரபி இயற்கை உரம் தக்காளி பயிருக்கு இட்டு அதன்மூலம் அதிக மகசூல் எடுத்த நிருபண வயல் விழா நடைபெற்றது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலர் கே.பி.பெரியண்ணன், மாவட்டத் தலைவர் டி.மாணிக்கம், துணைச் செயலர் கோவிந்தன் மற்றும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். கிரீன் ஸ்டார் உர நிறுவன தருமபுரி பகுதி விற்பனை அலுவலர் ஜி.சுகுனராஜ் வரவேற்றார். கள அலுவலர் குழந்தை வடிவேல் நன்றி கூறினார்.

**"சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை'**

**தஞ்சாவூர்,**

சிறுதானியங்கள் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் வேளாண் துறை இயக்குநர் எம். ராஜேந்திரன்.

தஞ்சாவூர் பாரத் அறிவியல், நிர்வாகவியல் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற 11-வது பட்டமளிப்பு விழாவில் அவர் மேலும் பேசியது:

கல்லூரி படிப்பை மாணவர்கள் முடித்தவுடன் அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலை உள்ளது. கல்வியால்தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்.

விவசாயம் அதிக வருமானம் தரும் தொழில் அல்ல. என்றாலும் இன்றைய இளைஞர்கள் விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றி வருகின்றனர்.

கம்பு, சோளம், கேழ்வரகு, தினை போன்ற சிறுதானியங்கள் ஒரு காலத்தில் முழுமையான உணவாகப் பயன்பாட்டில் இருந்தது. ஆனால், இப்போது சிறுதானியங்களின் பயன்பாடு இல்லை. இதனால், வேளாண்மைத் துறை சார்பில் சிறுதானியங்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெற்கதிரில் பூச்சி வந்துவிட்டது என செயற்கை மருந்தை விவசாயிகள் தெளிக்கின்றனர். இதனால், தீமை செய்யும் பூச்சியுடன் நன்மை செய்யக்கூடிய

பூச்சியும் இறந்துவிடுகிறது. நன்மை செய்யும் பூச்சியை வளர்ப்பதற்காக வயல்களில் பூச்செடிகளை வளர்க்க வேண்டும்.

முன்பெல்லாம் வேலைக்கு செல்ல வேண்டும் என்றால் சிபாரிசு இருந்தால் போதும். ஆனால் இப்போது தகுதி, திறமை இருந்தால் கண்டிப்பாக வேலை கிடைக்கும். எனவே, மாணவர்கள் தகுதி, திறமையை வளர்த்து கொள்ள வேண்டும் என்றார்.

பாரத் கல்விக் குழுமச் செயலர் புனிதா கணேசன் தலைமை வகித்தார்.

விழாவில் 499 மாணவ, மாணவிகளுக்குப் பட்டம் வழங்கப்பட்டது. இவர்களில் 36 பேர் பல்கலைக்கழக அளவில் மதிப்பெண் பெற்றவர்கள். கல்லூரி முதல்வர் த. வீராசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கோடை வெயில் தாக்கம் பழங்கள் விலை கடும் உயர்வு**

**கன்னியாகுமரி,**

கொளுத்தும் கோடை வெயில் காரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆப்பிள், ஆரஞ்சு உள்ளிட்ட பழங்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் கடந்த மாதம் கிலோ ரூ. 150-க்கு விற்பனையான ஆப்பிள், இப்போது ரூ. 180ஆக விலை உயர்ந்துள்ளது.

ஆரஞ்சு கிலோ ரூ. 40-லிருந்து ரூ. 80 ஆகவும், மாதுளை ரூ. 130-லிருந்து ரூ. 150 ஆகவும், கருப்பு திராட்சை ரூ. 50-லிருந்து ரூ. 60 ஆகவும், வெள்ளை திராட்சை ரூ. 80-லிருந்து ரூ. 100 ஆகவும், அன்னாசிப் பழம் ரூ. 30-லிருந்து ரூ. 50 ஆகவும், தர்ப்பூசணி கிலோ ரூ. 10-லிருந்து ரூ. 15 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

மாம்பழம் சீசன் தொடங்கியுள்ள நிலையில், பங்கனப்பள்ளி கிலோ ரூ. 80-க்கு விற்கப்படுகிறது. கொய்யா, பப்பாளி, சப்போட்டா, எலுமிச்சை ஆகிய பழங்களின் விலையில் பெரிதளவு மாற்றமில்லை.

பழங்களின் விலை உயர்வால் "ஜூஸ்' விலையும் அதிகரித்துள்ளதாக பழக்கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் கோடை வெயில் சுட்டெரிப்பதாலும், தேர்வு முடிந்து பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாலும் பழங்களின் தேவை அதிகரித்துள்ளது.

இதனிடையே, பருவமழை பொய்த்துவிட்டதால் பழங்களின் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. இதுவும் விலை உயர்வுக்குக் காரணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**களியக்காவிளையில் பலத்த மழை**

**களியக்காவிளை,**

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளில் புதன்கிழமை பலத்த மழை பெய்தது.

இப்பகுதியில் கடந்த இரு நாள்களாக பகலில் கடும் வெப்பம் காணப்பட்டது. லேசான மழையும் பெய்தது. இந்த நிலையில் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வானில் திடீரென மேகம் சூழ்ந்து, பலத்த மழை பெய்தது. களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளான மடிச்சல், படந்தாலுமூடு பகுதிகளிலும், பளுகல், கண்ணுமாமூடு, பனச்சமூடு மற்றும் கேரளப் பகுதியான பாறசாலை மற்றும் அதையொட்டிய பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.

கருங்கல்: கருங்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளான முள்ளங்கனாவிளை, வெள்ளியாவிளை, நடுத்தேரி, பாலூர், மாங்கரை, நட்டாலம், செல்லங்கோணம், கப்பியறை, பள்ளியாடி, புதுக்கடை, பைங்குளம் உள்ளிட்ட பகுதியில் பிற்பகல் 1 மணிக்குத் தொடங்கிய மிதமான மழை மாலை வரை நீடித்தது. இந்த மழையால் தென்னை, வாழை மற்றும் தோட்டப்பயிர் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இடி, மின்னலால் மின்சாதனப் பொருள்கள் சேதம்: நித்திரவிளை அருகே புதன்கிழமை ஏற்பட்ட இடி, மின்னலில் 20-க்கும் மேற்பட்ட டி.வி. உள்ளிட்ட மின்சாதனப் பொருள்கள் சேதமடைந்தன. நித்திரவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளில் புதன்கிழமை பிற்பகலில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இடி, மின்னல் ஏற்பட்டபோது ஆலங்கோடு, பருத்திவிளை, புதுவிளை பகுதியில் 20-க்கும் மேற்பட்ட வீடுகளிலிருந்த டி.வி.க்கள் சேதமடைந்தன. மேலும், புதுவிளையைச் சேர்ந்த சாந்தி என்பவரின் வீட்டில் இருந்த சோலார் விளக்கு மற்றும் மோட்டார், விஜயன் என்பவரின் வீட்டு ஜன்னல் கண்ணாடி, செல்வராஜ் என்பவரின் வீட்டு நீரேற்று மோட்டார் ஆகியவை சேதமடைந்தன. மேலும்,

இப்பகுதியில் மின்சார மீட்டர் மற்றும் மின் வயர்கள், கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த நீரேற்று மோட்டார் உள்ளிட்டவையும் சேதமடைந்தனவாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வேளாண் பொருட்கள் ஏற்றுமதி பன்மடங்கு அதிகரிப்பு



**புதுடில்லி**:கடந்த ஒரு சில மாதங்களாக, நாட்டின் ஒட்டு மொத்த ஏற்றுமதி குறைந்து வரும் நிலையில், வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டுள்ளது.

**பாசுமதி அரிசி:**கடந்த 2013–14ம் நிதியாண்டில், நாட்டின் ஒட்டு மொத்த ஏற்றுமதியில், வேளாண் பொருட்களின் பங்களிப்பு, 14.4 சதவீதமாக (31,235 கோடி டாலர்) அதிகரித்துள்ளது.இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 13.9 சதவீதமாக இருந்தது சென்ற நிதிஆண்டில், சாதாரண வகை அரிசி, பாசுமதி அரிசி, கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை ஏற்றுமதி பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, சென்ற நிதியாண்டில், பாசுமதி அரிசி ஏற்றுமதி அளவின் அடிப்படையில், 40 லட்சம் டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 28,189 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.மேலும், சாதாரண வகை அரிசி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 64 லட்சம் டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில்,

14,479 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது ஆக, இவற்றின் ஒட்டு மொத்த ஏற்று-மதி, 1.04 கோடி டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 42,668 கோடி ரூபாயா-கவும் உயர்ந்துள்ளது.

**சர்க்கரை:**சர்க்கரை ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. நடப்பு பருவத்தில் (அக்.,– செப்.,), மார்ச் வரையிலான ஆறு மாத காலத்தில், நாட்டின் ஒட்டு மொத்த சர்க்கரை (கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட) ஏற்றுமதி, 14.50 லட்சம் டன்னாக (மதிப்பு 4,000 கோடி ரூபாய்) வளர்ச்சி கண்டுள்ளது.இது, இதற்கு முந்தைய நிதியாண்டின் இதே காலத்தில், 35 ஆயிரம் டன்னாக இருந்தது. உள்நாட்டில், கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக, சர்க்கரை உற்பத்தி தேவையை விட அதிகமாக உள்ளது. இதனால், ஆலைகள், சுத்திகரிக்கப்படாத மூலச் சர்க்கரையை அதிகளவில் ஏற்றுமதி செய்து வருகின்றன.

**அமெரிக்கா:**அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில், இந்தி-யாவின் பாசுமதி அரிசிக்கு அதிக வரவேற்பு காணப்படுகிறது. இதன் காரணமா-கவே, இதன் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது என, ஏற்றுமதி-யாளர்கள் தெரிவித்தனர்.

**பால் உற்பத்தி 17.70 கோடி டன்னாக உயரும்**



**ஐதராபாத்**: வரும் 2019–2020ம் நிதி ஆண்டிற்குள், இந்தியாவின் பால் உற்பத்தி, 17.70 கோடி டன்னாக அதிகரிக்கும் என, ‘அசோசெம்’ அமைப்பின் தேசிய பொது செயலர் டீ.எஸ்.ராவத் தெரிவித்தார்.உள்நாட்டில், பால் உற்பத்தி சிறப்பான

அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. இதையடுத்து, பால் உற்பத்தியின், ஒட்டு மொத்த ஆண்டு வளர்ச்சி, 4 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.

**மதிப்பீடு:**இந்த வளர்ச்சி, வரும் 2016–17ம் நிதியாண்டிற்கு மதிப்பிடப்பட்டு உள்ள பாலுக்கான தேவையை (15 கோடி டன்) பூர்த்தி செய்ய உதவும்.கடந்த 2006 முதல் 2010 வரையிலான ஐந்தாண்டு காலத்தில், ஆந்திராவில், பால் உற்பத்தி மற்றும் தனிநபர் பால் நுகர்வு முறையே, 41 சதவீதம் மற்றும் 36 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

**ஆந்திரா:**நாட்டின் ஒட்டு மொத்த பால் உற்பத்தியில், ஆந்திரா, ராஜஸ்தான் (28 சதவீதம்), கேரளா (24 சதவீதம்), கர்நாடகா (24 சதவீதம்) மற்றும் குஜராத் (23.7 சதவீதம்) ஆகிய ஐந்து மாநிலங்கள் முன்னணியில் உள்ளன.கடந்த 2010–11ம் நிதியாண்டில், நாடு தழுவிய அளவில் பால் உற்பத்தி, 12.10 கோடி டன்னை தாண்டியுள்ளது.

**தனிநபர் பால் நுகர்வு:**உற்பத்தி சிறப்பாக அதிகரித்து வரும் அதேவேளையில், இந்தியாவில் தனிநபர் பால் நுகர்வு, 252 கிராம் என்ற குறைந்த அளவில் உள்ளது. இது, சர்வதேச சராசரி அளவான, 279 கிராமை விட குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.உலகளவில் தனிநபர் பால் நுகர்வில், நியூசிலாந்து (9,773 கிராம்) முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து, அயர்லாந்து (3,260 கிராம்), டென்மார்க் (2,411 கிராம்) ஆகிய நாடுகள் உள்ளன என, ராவத் மேலும் தெரிவித்தார்.

## ஏலக்காய் விலைரூ.832 ஆக அதிகரிப்பு



**கொச்சி**:ஏலக்காய் அதிகளவில் உற்பத்தியாகும், கேரளா மற்றும் தமிழகத்தில், இதன் அளிப்பு குறைந்து வருகிறது.இதையடுத்து, தரம் வாய்ந்த ஒரு கிலோ ஏலக்காய் விலை, 832 ரூபாயாக அதிகரித்து உள்ளது.நடப்பு பருவம் முடிவடையும் சூழலில், ஏலக்காய் வரத்து குறைந்து வருவதையடுத்து, தற்போது, இதன் விலை உயர்ந்து வருகிறது.

இருப்பினும், ஜூலை மாதத்துடன் நிறைவடைய உள்ள, ஏலக்காய் பருவத்தில், இது வரையிலுமாக, சந்தைகளுக்கு, 18,438 டன் ஏலக்காய் வந்துள்ளது.இது, கடந்-தாண்டின் இதே காலத்தில், 11,130 டன்னாக இருந்தது.இது வரையிலுமாக, 17,923 டன் ஏலக்காய் விற்பனையாகி உள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 10,604 டன்னாக இருந்தது.ஏப்., 17ம் தேதி, ஒரு கிலோ ஏலக்காயின் சராசரி விலை, 623 ரூபாயாக இருந்தது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 743 ரூபாய் என்ற அளவில், சற்று உயர்ந்து காணப்பட்டது. கேரளாவில், குறிப்பிட்ட சில மாவட்டங்களில் வறட்சி நிலவுவதால், ஏலக்காய் வரத்து குறைந்துஉள்ளது. இதன் காரணமாகவே, அண்மைக்காலமாக இதன் விலை உயர்ந்து வருகிறது என, வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## விவசாயிகள் நலன் உயர்த்தும் நாள் கொண்டாட கூட்டுறவு வங்கி ஊழியர் முடிவு

**சென்னை:** விவசாயிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மத்திய அரசு சிறப்புத் திட்டங்களை உருவாக்கக் கோரி, நாளை, கோரிக்கை அட்டை ஏந்தி வேலை செய்யவும், விவசாயிகள் நலன் உயர்த்தும் நாளாகவும் கொண்டாடவும், அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் திட்டமிட்டுள்ளனர். அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளன பொதுச் செயலர், பாலகிருஷ்ணன் கூறியதாவது:

நாட்டில் பல்வேறு துறைகள் வளர்ச்சி அடைந்து, அதைச் சார்ந்தோரின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது; ஆனால், விவசாயிகளின் வாழ்வாதாரம் இன்னும் மேம்படவில்லை. கடந்த ஆண்டில், நாடு முழுவதும், 8,400 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். எனவே, விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு, மத்திய, மாநில அரசுகள் சிறப்புக் கவனம் செலுத்துவது அவசியம். வெள்ளம் மற்றும் வறட்சியால் ஏற்படும் பாதிப்புக்கு இழப்பீடு தர, 20 ஆயிரம் கோடி ரூபாய் இடர் நீக்கு நிதியை உருவாக்க வேண்டும். விவசாய கட்டமைப்புக்களை

மேம்படுத்த, குறைந்த வட்டியில் கடன் வழங்க, பட்ஜெட்டில், 10 லட்சம் கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்க வேண்டும். அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் சம்மேளனம் நிறுவி, நாளையுடன், 28 ஆண்டுகள் ஆகின்றன. அன்று, விவசாயிகள் நலன் உயர்த்தும் நாளாக கொண்டாடுகிறோம்.

நாடு முழுவதும் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும், 1.5 லட்சம் உறுப்பினர்கள், விவசாயிகள் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தக் கோரி, கோரிக்கை அட்டை அணிந்து வேலை செய்வர். கோரிக்கைகள், புதிதாக அமையும் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு, அவர் கூறினார்.

## மக்காச்சோளம் விற்பனை மையம் துவக்க விவசாயிகள் எதிர்பார்ப்பு

**காளையார்கோவில்**: காளையார்கோவில் பகுதியில் கடுமையான வறட்சியிலும் விளைந்த மக்காச்சோளத்தை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். இங்கு விற்பனை மையம் துவங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காளையார்கோவில் ஒன்றியத்தில் கிணற்று பாசனம் மூலம் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் கடலை,கரும்பு,காய்கறி பயிரிட்டு வந்தனர். கடந்த சில ஆண்டுகளாக மழை இல்லாததால்,நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் உள்ளது. கிடைக்கின்ற தண்ணீரை வைத்து விவசாயம் செய்தாலும்,நோய் தாக்கி மகசூல் குறைவு,தகுந்த நேரத்தில் வேலைக்கு ஆட்கள் கிடைக்காததால் பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகளிடையே ஆர்வம் குறைந்து வந்தது.இந்நிலையில் வேளாண்மை துறையினர் குறைந்த செலவில் அதிக மகசூல் தரக்கூடியதும்,வறட்சியை தாங்கக்கூடிய மக்காச்சோள சாகுபடியை அறிமுகம் செய்தனர்.

நடப்பு ஆண்டு 500 ஏக்கருக்கு மேல் மக்காச்சோளம் சாகுபடிசெய்துள்ள நிலையில், விவசாயிகள் மக்காச்சோளத்தை விற்பனை செய்ய மதுரை, மேலூர்,புதுக்கோட்டை என பல்வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இப்பிரச்னையை தீர்க்க காளையார்கோவில் பகுதியில் மக்காச்சோள விற்பனை மையம் துவங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோடையால் குறைந்த வெற்றிலை வரத்து; விலை உயர்வால் மகிழ்ச்சி

**தர்மபுரி**: கோடை வெயில் காரணமாக வெற்றிலை வரத்து குறைந்துள்ளதால், வெற்றிலை விலை உயர்ந்துள்ளதால், வியாபாரிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, நல்லம்பள்ளி, சோலைக்கொட்டாய், அதகபாடி, பென்னாகரம் உட்பட மாவட்டம் முழுவதும் சுமார், 600 ஏக்கருக்கு மேல் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, உற்பத்தியாகும் வெற்றிலை, பெங்களூரு, சேலம், ஈரோடு, கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு, விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

மாவட்டத்தில், கடந்த பிப்ரவரி மாதம் முதல் வெயில் கொளுத்தி வருவதாலும், போதிய பாசன வசதி இல்லாததாலும், மாவட்டத்தில் வெற்றிலை உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. குறிப்பாக, கடந்த சில தினங்களாக, 100 டிகிரிக்கு மேல், வெயிலின் அளவு உள்ளதால், வெற்றிலைக் கொடிகளில், வெற்றிலைகள் கருகுவதுடன், கிழிந்தும் வருகிறது.

இதனால், வெற்றிலை மகசூல் குறைந்ததால், சந்தைக்கு வரும் வெற்றிலையின் அளவு கணிசமாக குறைந்தது. வெற்றிலை வரத்து குறைவால், ஒரு கூடை வெற்றிலை, 6,000 ரூபாய் முதல், 13 ஆயிரம் ரூபாய் வரை, தரத்துக்கு தகுந்தவாறு விற்பனை செய்யப்படுகிறது.

கோடை வெயில், தொடர்ந்து வருவதால் வெற்றிலையின் உற்பத்தி பாதிக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், திருமண சீஸன் உள்ளிட்டவை துவங்க உள்ளதால், வெற்றி விலை மேலும் உயரக்கூடிய வாய்ப்புள்ளதாக வெற்றிலை வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, வெற்றிலை வியாபாரிகள் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வியாபாரிகள் வெற்றிலை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் கடந்த, இரண்டு ஆண்டுகளாக போதிய பருமழை பெய்ய வில்லை. இதனால், விவசாய கிணறுகளில், தண்ணீர் மட்டும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தில், கடந்த சில மாதங்களாக வெயில் கொளுத்தி வருகிறது. இதனால், வெற்றிலை சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளது. இதே போன்று, தமிழகம் முழுவதும் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதிகளில், வெற்றிலை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், சந்தைக்கு வெற்றிலை வரத்து கணிசமாக குறைந்துள்ளது. இதனால், கடந்த மார்ச் மாத இறுதியில் இருந்து வெற்றிலையின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தற்போது, ஒரு கூடை வெற்றிலை, 6,000 ரூபாயில் இருந்து, 13 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. வரும் வைகாசி மாதம், அதிக சுப முகூர்த்தங்கள் நடக்க உள்ளதால், அப்போது, வெற்றிலை விலை, மேலும் உயரும், என்றனர்.

### கொப்பரை தேங்காய் விலை தொடர் உயர்வு

**வெள்ளகோவில்**: தொடர்ந்து மழை இல்லாத நிலையால், தென்னை மரங்களில் காய்ப்பிடிப்பு குறைந்து வருகிறது. அதே நேரம், தேங்காய் பருப்பு விலை உச்சம் தொடுவதால், தென்னை விவசாயிகள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர்.

தொடர்ச்சியாக, மழை இல்லாததால், தென்னை காய் பிடிக்காமல், தேங்காய் பருப்பு வரத்து குறைந்து வருகிறது. பல இடங்களில் தென்னை மரங்கள் காய்ந்து, காய்கள் உற்பத்தி குறைந்து காணப்படுகிறது. இதனால், கொப்பரை தேங்காய் பருப்பு, ஒரு கிலோ, 107 ரூபாய், இடிபிள் கொப்பரை, 120 ரூபாய்க்கு விற்பனையாகி உள்ளது. 15 கிலோ எடை கொண்ட, லூஸ் தேங்காய் எண்ணெய் டின், 2,350 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வரும் காலங்களில், தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்தால், தேங்காய் எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

### தரமான விதைகளை வாங்க விவசாயிகளுக்கு அறிவுரை

**ஊட்டி**: நீலகிரி விவசாயிகள் தரமான விதைகளை வாங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் வெளியிட்டு செய்திக்குறிப்பு: விவசாயிகள் காய்கறி விதைகளை வாங்கும் போது விதை விற்பனையாளர், விதை விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்றுள்ளாரா என்பதையும், விதைகள் இருப்பு விவரம் மற்றும் விதைகளின் விலை விபரம் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும், விதை விவர அட்டையில் உள்ளவைகளை சரிபார்த்து வாங்க வேண்டும்; காலாவதியான விதைகளை வாங்க வேண்டாம். வாங்கும் விதைகளின் முளைப்பு திறனுக்கான பகுப்பாய்வு முடிவின்

உண்மை நகலினை பார்த்து வாங்க வேண்டும்; விதை விற்பனை பட்டியலை விற்பனையாளரிடமிருந்து கேட்க வேண்டும்; விதை விற்பனை பட்டியலில் பயிர், ரகம், குவியல் எண் காலாவதி நாள் குறிப்பிட்டுள்ளதா என்பதை பார்க்க வேண்டும்; விற்பனை பட்டியல் வாங்கும்போது, அனைத்து விவரங்களையும் சரிபார்த்து கையொப்பமிட்டு விற்பனையாளரின் கையொப்பத்துடன் பயிரின் அறுவடைக் காலம் வரை பத்திரமாக வைத்திருக்க வேண்டும்; விதைகள் விதைத்தபின் விதை கொள் கலன்களை பயிரின் அறுவடை காலம் வரை வைத்திருக்க வேண்டும். இவ்விபரங்களை கொண்டு விவசாயிகள் விதைகள் வாங்க வேண்டும். இவ்வாறு பொன்னுசாமி கூறியுள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மஞ்சள் விற்பனை மந்தம்**



ஈரோடு: கடந்த புதன் கிழமை ஈரோடு மஞ்சள் மண்டிகளுக்கு சுமார் 2 ஆயிரம் மூட்டை மஞ்சள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. இதில் 50 சதவீத அளவிற்கே மஞ்சள் விற்பனையானது என்றும் தேர்தலை முன்னிட்டு வெளியூர்களில் இருந்தும் வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் மஞ்சள் விற்பனை மந்தமாகவே இருந்தது என்றும் மண்டியில் உள்ளவர்கள் தெரிவித்தனர்.

**குன்னூரில் இன்று தேயிலை ஏலம்**



**குன்னூர்**: தமிழகத்தில் நேற்று நடந்த தேர்தலை முன்னிட்டு, குன்னூரிலுள்ள டிடிஏ ஏல மையத்தில் வழக்கமாக வியாழக்கிழமை நடக்கும் தேயிலை ஏலம் நடைபெறவில்லை. வெள்ளிக்கிழமை (இன்று) நடைபெறும் தேயிலைத் தூள் ஏலத்துடன் தேயிலை ஏலமும் சேர்த்து நடக்கும். தற்போது, குறைவான அளவிற்கே தேயிலை வரத்து இருக்கும் என்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

**கோதுமை கொள்முதலில் சரிவு எப்சிஐ அதிகாரி தகவல்**



**சண்டிகர்**: கோதுமைகொள்முதலில் சரிவு ஏற்பட்டுள்ளதாக எப்சிஐ அதிகாரிகள் தெரிவித்தனர். பஞ்சாபில் கடந்த சில தினங்களுக்கு முன் திடீரென்று பெய்த மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த கோதுமை வயல் சேதமடைந்தது. அறுவடை செய்து வைத்திருந்த கோதுமையும் மழையில் நனைந்தது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். இதுகுறித்து பஞ்சாப் மற்றும் ஹரியானாவை சேர்ந்த கோதுமை விவசாயிகள் கூறுகையில், கோதுமை சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு

முன்பு பஞ்சாபில் வட மண்டலத்தில் திடீரென்று பெய்த மழையால் கோதுமை வயல் சேதமுற் றது. ஏற்கனவே அறுவடை செய்து வைத்திருந்த கோதுமையும் மழையில் நனைந்து விட்டது. இதனால், சாகுபடிக்கு செலவு செய்த தொகையை கூட விவசாயிகளால் திரும்ப எடுக்க முடியாது. இன்னொரு பக்கம் கோதுமையில் அதிக ஈரப்பதம் இருக்கிறது என்று காரணத்தை சொல்லி கொள்முதல் செய்வதை அரசு தவிர்த்து வருவதால் எங்கள் நிலைமை மோசமாக இருக்கிறது. சில இடங்களில் கோதுமையை நாங்கள் உலர வைத்து மண்டிக்கு அனுப்பும் வேலையை செய்து வருகிறோம் என்றனர். கோதுமை கொள்முதல் குறித்து இந்திய உணவுக் கழகத்தின் அதிகாரிகள் (எப்சிஐ) கூறுகையில், கோதுமையில் ஈரப்பதத்தின் அளவு 12 சதவீதம் வரை அனுமதிக்கப்படுகிறது. அதற்கு மேல் இருந்தால் கொள்முதல் செய்யமுடியாது. மழையின் காரணமாகவும் கோதுமையில் ஈரப்பதம் அதிகமுள்ளது. இந்நிலையில், இதுவரை 4.30 லட்சம் டன் கோதுமை மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் 19.5 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்தோம் என்றனர்.

## ரூ.30க்கு விதை பரிசோதனை

**விழுப்புரம்**, : விழுப்புரம் விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் பிரேமலதா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் விதைப்பரிசோதனை செய்தபின் விவசாயத்திற்கு அல்லது விநியோகத்திற்கு பயன்படுத்த வேண்டும். வேளாண்மைக்கு முதன்மையான இடுபொருள் விதை. விதையின் தரத்தினை பொறுத்தே விளைச்சலும் அமையும். விதையின் தரம் அதன் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம், பிறரக கலப்பு விகிதம் ஆகியவற்றை பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே விதையின் தரத்தினை பரிசோதித்து அறிய விழுப்புரம் புதிய பேருந்துநிலையம் பின்புறத்தில் அமைந்துள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் இயங்கும் விதைப் பரிசோதனை நிலையத்தை அணுக வேண்டும்.

ஒவ்வொரு விதை மாதரிக்கும் ரூ.30 பரிசோதனை கட்டணமாக செலுத்தி பரிசோதனை செய்துகொள்ளலாம். விதை மாதிரியுடன், விதை மாதிரியின்

விவரங்கள், பகுப்பாய்வு முடிவுகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி ஆகியவற்றை குறிப்பிட்டு வேளாண்மை அலுவலர் விதைப்பரிசோதனை நிலையம் விழுப்புரம் என்ற முகவரியிட்ட கடிதம் இணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் பரிசோதனையின் காலம் 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பரிசோதனை காலத்தின் முடிவில் பகுப்பாய்வு முடிவுகள் நீங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பலாப்பழம் வரத்து அதிகரிப்பு**

**சேலம்**, : கேரளாவில் இருந்து சேலம் மார்க்கெட்டுக்கு பலாப்பழம் வரத்து அதிகரித்துள்ளது. ஒரு பலாப்பழம் ரூ.50 முதல் ரூ.130 வரை விற்பனை செய்யப்படுகிறது.

முக்கனிகளில் ஒன்றான பலா கோடை காலத்தில் அறுவடை சீசன் துவங்கும். இந்தியாவில் கேரளா மற்றும் தமிழகத்தில் தான் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதை தவிர கொல்லிமலை, கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு ஆகிய கோடை ஸ்தலத்தில் மிகக்குறைந்த அளவில் பலா சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த சில நாட்களாக கேரளா மாநிலம் சாலக்குடி, திருச்சூர், மலப்புரம், பாலக்காடு, கொச்சின், எர்ணாகுளம் உள்ளிட்ட இடங்களில் இருந்தும், தமிழகத்தில் பண்ருட்டியிலும் இருந்து சேலத்திற்கு பலாப்பழம் விற்பனைக்கு வருகிறது. இதுகுறித்து பலா மொத்த வியாபாரிகள் கூறியதாவது: தமிழகம் மற்றும் கேரளாவில் பலாப்பழம் சீசன் துவங்கியுள்ளது.

கேரளாவில் இருந்து மிக அதிகமாக தினமும் 5 லோடு பலாப்பழம் கொண்டு வரப்படுகிறது. பலா சீசன் களைகட்டினால் தினமும் 15 லோடுக்கு மேல் சேலத்திற்கு வரும். பலாவின் அளவு பொருத்து ஒரு பழம் ரூ.50 முதல் ரூ.130 வரை விற்கப்படுகிறது.

இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**பூனாவுக்கு செல்லும் போச்சம்பள்ளி மாங்காய்**

**போச்சம்பள்ளி**, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு நிலவும் சீதோஷ்ண நிலை மா சாகுபடிக்கு சாதகமாக உள்ளது. போச்சம்பள்ளி தாலுகாவில் சந்தூர், வேலம்பட்டி, புலியூர், மத்தூர், ஓலைப்பட்டி, தாதம்பட்டி, வீரமலை உள்ளிட்ட பகுதியில் 17 ஆயிரம் ஹெக்டேரில் மா விளைகிறது.

கடந்த ஆண்டை விட இந்தாண்டு மா விளைச்சல் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் கடந்த சில வாரங்களாக கோடை வெயில் கொளுத்தி வருவதால் மரங்களில் இருந்து பிஞ்சுகள் உதிர்ந்து வருகின்றன. அவைகள் ஊறுகாய் தயாரிப்பதற்காக விற்பனை செய்யப்படுகிறது. மரங்களில் இருந்து உதிரும் நாட்டு ரக மாங்காய் பூனாவிற்கு அனுப்பப்படுகிறது. விவசாயிகளிடம் இருந்து நாட்டு ரக மாங்காய்களை வியாபாரிகள் கிலோ ரூ.8க்கு வாங்கி பூனாவுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். கடந்த ஆண்டைவிட மாங்காய் விலை ரூ.1.50 அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**சூரியகாந்தி மலர்களை சுற்றுலா பயணிகள் பார்த்து வியப்பு**

**ஊட்டி**, : அரசு தாவரவியல் பூங்காவில் வைக்கப்பட்டுள்ள 15 ஆயிரம் தொட்டிகளில் 200க்கும் மேற்பட்ட தொட்டிகளில் பூத்துள்ள சூரியகாந்தி மலர்கள் சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளது.

ஆண்டு தோறும் ஊட்டி தாவரயில் பூங் காவில் மலர் கண்காட்சி நடத்தப்படும். இந்த மலர் கண்காட்சிக்காக, பூங்காவில் 2 லட்சத்திற்கு மேல் பல வகையான மலர் நாற்று நடவு செய்யப்படும். ஏப்ரல் மாதம் 3வது வாரத்திற்கு மேல் பூங்கா முழுவதிலும் மலர்கள் பூத்துக் குலுங்கும்.

ஆனால், இம்முறை ஊட்டியில் பருவமழை பொய்த்த நிலையில், செடி களில் இதுவரை முழுமை யாக மலர்கள் பூக்கவில்லை. ஆங்காங்கே ஒவ்வொரு செடிகளில் மட்டும் மலர்கள் பூத்துள்ளன. மற்ற செடிகளில் மொட்டுகள் மட்டுமே காணப்படுகிறது.

அதே சமயம் 15 ஆயிரம் தொட்டிகளில் வைக்கப்பட்டுள்ள மலர் செடிகளில்

தற்போது 200க்கு மேற்பட்ட தொட்டிகளில் வைக்கப்பட்டுள்ள சூரியகாந்தி மலர்கள் மட்டுமே பூத்துள்ளன. பேன்சி மற்றும் இதர மலர் செடிகளில் மொட்டுகள் மட்டுமே காணப்படுகிறது.

இந்த தொட்டிகள் உள்ள செடிகளில் முழுமையாக பூக்க மேலும் ஒரு வார காலம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்ணாடி மாளிகையில் வைக்கப்பட்டுள்ள மலர் அலங்காரத்தை கண்டும், தொட்டிகளில் வைக்கப்பட்டுள்ள சூரியகாந்தி மலர்களை கண்டு ரசித்து செல்கின்றனர். கோடை சீசன் களைகட்டியுள்ள நிலையில், அடுத்த மாதம் 23,24 மற்றும் 25 ஆகிய தேதி களில் மலர் கண்காட்சி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் ஊட்டியில் சுற்றுலா பயணிகள் அதிகம் காணப்பட்ட நிலையில், தேர்தலால் கடந்த இரு நாட் களாக சுற்றுலா பயணிகள் கூட்டம் சற்று குறைந்து காணப்பட்டது. இன்று மாலை முதல் வெளி மாவட்ட மக்கள் ஊட்டியை முற்றுகையிட வாய்ப்புள்ளது.

**சுற்றுலா பயணிகளை கவரும் ஊட்டி காய்கறிகள்**

**ஊட்டி**, : நீலகிரியில் விளையும் பல்வேறு இங்கிலீஸ் காய்கறிகள் சாலையோரங்களில் வைத்து விற்பனை செய்யப்படும் நிலையில் அதனை ஆர்வமுடன் சுற்றுலா பயணிகள் வாங்கிச் செல்கின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் உருளைகிழங்கு, கேரட், பீட்ரூட், முட்டைகோஸ், முள்ளங்கி உட்பட பல்« வறு காய்கறிகள் விளைவிக்கப்படுகிறது. அதே போல், பல்வேறு வகையான கீரை வகைகளும் விளைவிக்கப்படுகிறது.

ஊட்டிக்கு நாள் தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வரும் நிலையில், பெரும்பாலான பகுதிகளில் விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் விளைவிக்கப்படும் கேரட் விற்பனை செய்து வந்தனர். இதனை அதிகளவு சுற்று லா பயணிகள் வாங்கிச் செல்வது வழக்கம். தற்போது கோடை சீசன் களைகட்டியுள்ள நிலையில், ஊட்டி மற்றும் புறநகர் பகுதிகள், தொட்டபெட்டா மற்றும் பல்வேறு சுற்றுலா பகுதிகளுக்கு செல்லும் வழி முழுவதிலும் பல்வேறு இடங்களில் விவசாயிகள் பல்வேறு வகை யான காய்கறிகளை விற்பனை செய்து

வருகின்றனர். குறிப்பாக கேரட், பீட்ரூட், முள்ளங்கி, முட்டைகோஸ் உள்ளிட்ட இங்கிலீஸ் காய்கறிகள் மற்றும் பல்வேறு வகைய £ன கீரை வகைகள் ஆகியவைகளை தங்களது தோட்டங்களில் இருந்து பறித்துக் கொண்டு வந்து 'பிரஷ்' ஆக விற்பனை செய்கின்றனர். ஊட்டி வரும் வெளி மாவட்ட சுற்றுலா பயணிகள் பெரும்பாலானவர்கள் இந்த காய்கறிகளை வாங்கிச் செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இது போன்று சாலையோரங்களில் காய்கறிகளை விற்பனை செய்யும் சிறு விவசாயிகளில் பலர், தங்கள் வீட்டின் அருகில் உள்ள சிறிய இடங்களில் காய்கறிகளை பயிரிட்டு அதனை சாலையோரங்களில் கடைகள் விரித்து விற்பனை செய்கின்றனர். குறிப்பாக, கோடை காலத்தில் பலர் காய்கறி விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

இதனை சுற்றுலா பயணிகள் பலர் வாங்கிச் செல்வதால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. மார்க்கெட் மற்றும் உழவர் சந்தை போன்ற பகுதிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதால் தூக்கு கூலி, போக்குவரத்து செலவு என செலவு அதிகரிக்கும் நிலையில், வீட்டின் அருகே இதனை விற்பனை செய்வதால் லாபம் அதிகம் என்கின்றனர், விவசாயிகள்.

**நீலகிரி மாவட்டத்தில் பிச்சீஸ் பழ சீசன் துவக்கம்**

**ஊட்டி**, : நீலகிரி மாவட்டத்தில் பிச்சீஸ் பழ சீசன் துவங்கியுள்ளதால் ஊட்டி நகரில் பிச்சீஸ் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் மலை காய்கறிகள் மட்டுமல்லாது மாவட்டத்தில் ஆரஞ்சு, வால் பேரிகாய், பிளம்ஸ், பிச்சீஸ் மற்றும் நாவல் பழங்கள் போன்ற பழ வகைகளும் இயற்கையாகவே விளைகின்றன.

இந்நிலையில் தற்போது அத்திக்கல், மஞ்சூர், தேவர்சோலை மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இம்முறை பிச்சீஸ் பழங்கள் அதிகளவு காய்த்துள்ளன. நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் துவங்கியுள்ள நிலையில் ஊட்டிக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வந்த வண்ணம் உள்ளனர். ஊட்டி நகரில் பிச்சீஸ் பழங்கள் விற்பனை செய்யப்படுவதால் இதனை சுற்றுலா பயணிகள் வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் பீச்சீஸ் பழத்தின் விற்பனை அதிகரித்துள்ளது. பிச்சீஸ் பழம் இளம் சிவப்பு நிறத்தில் புளிப்பு சுவையுடன் இருக்கும்.

**மே, ஜூன் மாதங்களில் கத்தரி விலை நிலையாக இருக்கும்**

**கோவை,** : கோவை வேளாண் பல்கலைக்கழகம் கத்தரியின் விலை மே மற்றும் ஜூன் மாததங்களில் நிலையாக இருக்கும் என்று தெரிவித்துள்ளது. கத்தரியில் நீர் மற்றும் பொட்டாசியம் அதிகமாக உள்ளது. இது பல மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. குறிப்பாக புற்றுநோய், ரத்தஅழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. பாரம்பரிய சீன மருத்துவத்தில் குடல் ரத்தப்போக்கை நிறுத்தப் பயன்படுகிறது. இதன் பழம் காளான் நச்சுக்கு மாற்று மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவிலிருந்து உலகம் முழுவதும் 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கத்தரி புதிய மற்றும் குளிர்விக்கப்பட்ட கத்தரிக்காயாகவும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி சந்தையாக நெதர்லாந்து உள்ளது. அதனை தொடர்ந்து கனடா, பக்ரைன், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஐக்கிய அரபு நாடுகள் ஆகியன உள்ளன.

தமிழ்நாட்டில் சேலம், திண்டுக்கல், வேலூர், மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கத்தரி பரவலாக பயிரிடப்படுகிறது. இதில் 12 சதவீதத்துடன் சேலம் முதல் இடத்தில் உள்ளது. கத்தரி குளிர் மற்றும் கோடையில் பயிரிடப்படுகிறது. கோவைக்கு ஆலந்துறை, கச்தேகவுண்டன் சாவடி, மற்றும் சூலூர் பகுதிகளிலிருந்து வரத்து உள்ளது. தற்போது கிலோ ரூ. 9 முதல் 12 வரை விவசாயிகளுக்கு கிடைக்கிறது. வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் ஊக்குவிப்பு மையம் கடந்த 11 வருடங்களில் கோவை, ஓட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் சந்தைகளில் நிலவிய விலைவிபரங்களை ஆராய்ந்தது.

இதன்படி ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் கத்தரியின் விலை கிலோ 10 முதல் 12 வரை இருக்கும். மேலும் ஜூன் மாதத்தில் கோவை மற்றும் தலைவாசல் சந்தையில் ஒன்று அல்லது இரண்டு ரூபாய் விலை ஏற வாய்ப்பு உள்ளது என கணிக்கப்பட்டுள்ளது.

## கோவையில் நடைபெற உள்ள தோட்டக்கலை கூட்டத்துக்கு விவசாயிகளுக்கு அழைப்பு

**மயிலாடுதுறை,** : கோவையில் நடைபெற உள்ள இந்திய தோட்டக்கலை கூட்டத்தில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டம் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சசிகலா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வரும் நவம்பர் 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை 6வது இந்திய தோட்டக்கலை கூட்டம் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தில் நடக்க இருக்கிறது. இந்தக்கூட்டத்துக்கு 2 வருடங்களுக்கு ஒரு முறை 2004 முதல் இந்திய தோட்டக்கலையினால் ஏற்படும் ஒருங்கிணைந்த வளர்ச்சி என பெயரிடப்பட்டுள்ளது. இதில் கலந்துகொள்ள நாகை மாவட்டத்திலிருந்து தோட்டக்கலை விவசாயத்தில் புதுமை புகுத்திய இரண்டு விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். எனவே தோட்டக்கலை விவசாயிகள் தங்களது கண்டுபிடிப்புகளுடன் வரும் 25ம் தேதிக்குள் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தி நேரில் தொடர்பு கொள்ளலாம். 04365 246266 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என சசிகலா தெரிவித்துள்ளார்.

## மதுரை, மேலூரில் திடீர் மழை

**மதுரை,** : மதுரை, மேலூரில் நேற்று 10 நாட்களுக்கு பிறகு மீண்டும் நேற்று மழை பெய்தது.

மதுரையில் கோடை வெயில் மக்களை வாட்டி வதைத்து வருகிறது. நிலத்தடி நீர் அதலபாதாளத்திற்கு சென்று விட்டது. குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவும் நிலை உருவாகி விட்டது. இந்நிலையில் 10 நாட்களுக்கு முன்பு திடீரென மதுரையில் மழை பெய்தது. ஒரு சில இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்தது. இதனால் பொது மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர். அதன் பிறகு மறுபடியும் வெயில் கொளுத்தியது இந்நிலையில் மீண்டும் மதுரையில் நேற்று மழை பெய்தது. நேற்று மாலை மதுரையில் அய்யர்பங்களா, புதூர், சம்பக்குளம், உத்தங்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.

மேலூர்: மேலூர் நகர் மற்றும் கிராம பகுதிகளில் நேற்று மாலை இடியுடன் கூடிய மழை பெய்தது. மேலூர், கீழவளவு, கீழையூர், வெள்ளலூர், உறங்கான்பட்டி, ஆட்டுக்குளம் பகுதியில் பலத்த இடி மின்னலுடன் தரையை நனைக்கும் அளவில் மழை பெய்தது. சென்னகரம்பட்டியில் பலத்த காற்றில் 3 மின்கம்பங்கள் சாய்ந்தன. தும்பைபட்டி, அட்டப்பட்டி பகுதியில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தது. இந்த மழையால் நேற்று இரவு மேலூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது.

**வைகை அணை நீர்மட்டம் சரிவு**

**ஆண்டிபட்டி**, : வைகை அணை நீர் மட்டம் தொ டர்ந்து சரிந்து வருவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களுக்கு முக்கியமான நீராதாரமாக இருந்து வருகிறது.

71 அடி உயரம் கொண்ட அணையின் நீர்மட்டம் தற்பொழுது 24.84 அடியாக குறைந்து விட்டது. நீர்வரத்து இல்லை. அணையிலிருந்து விநாடிக்கு 35 கன அடி குடிநீருக்காக திறக்கப்படுகிறது. 205 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. அணைப்பகுதியில் தேங்கி உள்ள நீர் பச்சை நிறத்தில் குளம் போல காட்சியளிக்கிறது. இன்னும் சிறிது குறைந்தால் 15 அடி ஆழத்துக்குள் சேறும், சகதியாகவும் இருக்கும். இதனால் மதுரை பகுதிக்கு கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும். கடந்த 2 ஆண்டு காலமாக பருவமழை பொய்த்து வருகிறது. எனவே நடப்பாண்டு கோடை மழை பெய்யாவிட்டால் மதுரை மக்கள் மிகப்பெரிய குடிநீர் பஞ்சத்தை சந்திக்கும் அபாயம் உள்ளது.

**மே 31 வரை மீன் பிடிக்க தடை பரமக்குடியில் மீன்விலை கடும் உயர்வு**

**பரமக்குடி**, : தமிழகம் முழுவதும் விசைப்படகுகளில் மீன்பிடிக்க மே 31 வரை மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பரமக்குடி நகர் பகுதியில் மீன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் மீன்கள்

இனப்பெருக்கம் செய்ய ஏதுவாக கடல் பகுதிகளில் விசைப்படகுகளில் சென்று மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் இந்த தடை நடைமுறைக்கு வந்தது. மே மாதம் 31ம் தேதி வரை இந்த தடை அமலில் உள்ளது. இதையடுத்து மண்டபம், ராமேஸ்வரம் பகுதிகளில் நாட்டுப்படகு மீனவர்கள் மட்டும் கடலுக்குள் சென்று மீன்பிடித்து வருகின்றனர். இதனால் ராமநாதபுரம், பரமக்குடி மீன் மார்க்கெட்டிற்கு மீன்வரத்து குறைவாக உள்ளது. பற்றாக்குறை உள்ளதால் மீன் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. சூடை மீன் கிலோ ரூ.30 லிருந்து ரூ.50 வரையிலும், நகரை மீன் கிலோ ரூ.80 லிருந்து ரூ.100 வரையிலும், ஊழா மீன் கிலோ ரூ.150 லிருந்து ரூ.200 வரையிலும், விலை மீன் கிலோ ரூ.120 லிருந்து ரூ.180 வரையிலும், நண்டு கிலோ ரூ.150 லிருந்து ரூ.200 வரையிலும். சீலா கிலோ ரூ.250 லிருந்து ரூ.300 வரையிலும். அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது. போதிய அளவு மார்க்கெட்டிற்கு கடல்மீன் வராததால் கண்மாயில் பிடிக்கப்படும் கெழுத்தி, கெண்டை, வளர்ப்பு கட்லா மீன்களை வாங்கி மீன் வியாபாரிகள் விற்கின்றனர். அதனால் இவற்றின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. விலை உயர்வு, மீன் வரத்து குறைவு ஆகிய காரணங்களால் அசைவ பிரியர்கள் ஆடு, கோழி இறைச்சியை விரும்பி வாங்கி உண்ண தொடங்கியுள்ளனர். மே 31க்கு பின்னரே மீன்கள் விலை கணிசமாக குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அன்பு கூறுகையில், மீன்பிடி தடை காரணமாக மீன்விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் சிரமம் அடைந்துள்ளனர். கடும் விலை உயர்வு காரணமாக ஒரு சில அசைவ பிரியர்கள் காய்கறி உணவிற்கு மாற தொடங்கி விட்டனர். மீன் வரத்து குறைந்து இருந்தாலும் மீன்களின் கூடுதல் விலையை மீன் வியாபாரிகள் சங்கத்தினர் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் என்றார்.

**மலட்டாறு மதகு அணை திட்டம் முழுமை பெறுவது எப்போது?**

**முதுகுளத்தூர்,** : முதுகுளத்தூர் அருகே மலட் டாறு மதகு அணை திட்டம் எப்போது முழுமை பெறும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர். மதுரை வைகை ஆற்றில் வரும் தண்ணீர் கமுதி, கடலாடி பகுதிகள் வழியாக

கடலில் கலக்கும். இதில் உபரி நீரை தடுத்து விவசாயத்திற்கும் பயன்படுத்த வசதியாக மலட்டாறு மதகு அணை திட்டம் 1996ம் ஆண்டு ரூ.15 கோ டியில் துவங்கப்பட்டது. பின்னர் மறு மதிப்பீடு செய்யப்பட்டு, ரு.42 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

இத்திட்டம் மூலம் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் ஆகிய தாலுகாக்களில் உள்ள கிராம மக்கள் பயன்பெறுவர். வலது, இடது பிரதான கால்வாய் என பிரிவு கால்வாய்கள் உருவாக்கப்பட்டன. இந்த கால்வாய்கள் மூலம் கமுதி தாலுகாவில் புதுக்கோட் டை, கோவிலாங்குளம், செங்கப்படை உள்ளிட்ட 27 கண்மாய்களும், அதே போல் கடலாடி தாலுகா வில் கிடாத்திருக்கை, பொதிகுளம், ஆப்பனூர், புனவாசல், மாரந்தை, ஓரிவயல் உள்ளிட்ட 28 கண்மாய்கள் மூலம் பல ஆயிரம் ஹெக்டேர் நிலங் கள் பாசன வசதி பெறும்.

ஆனால் இத்திட்டத்தில் பிரதான கால்வாய்கள் மட்டும் உருவாக்கப்பட்டன. இதிலிருந்து செல்லும் மதகணை பிரிவு கால்வாய்கள் உருவாக்கப்படவில்லை. அதாவது, எந்த கண்மாய்க்கும் இதுவரை பிரிவு கால்வாய் மற்றும் மதகணைகள் உருவாக்கவில்லை. மேலும் மெயின் கால்வாய்களில் கருவேல மரங்கள் அடர்ந்து வைகை யில் இருந்து வரும் மழை நீர் வீணாக கடலுக்கு செல்கிறது. எனவே, இத்திட்டத்தினை முறையாக பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆப்பனூ ரை சேர்ந்த செந்திவேல் கூறுகையில், `மலட்டாறு மதகணை திட்டம் கடலில் வீணாய் கலக்கும் உபரி நீரை தடுத்து விவசாயத்திற்கு பயன்படுத்தும் வகையில் துவங்கப்பட்டது. இத்திட்ட த்தால் கடலாடி, கமுதி, முதுகுளத்தூர் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஹெக் டேர் நிலங்கள் பயன்பெ றும். ஆனால் இத்திட்டத் தினை முறையாக செயல்படுத்தாமல் கிடப்பில் போ டப்பட்டு விட்டது. விவசாய நிலங்கள் பயன்பெறும் கண்மாய்களுக்கு தண்ணீர் இது வரை கிடைக்கவில்லை. வருகிற தண்ணீரும் வீணாக கடலில் கலந்துகொண்டு தான் இருக்கிறது. இதனால் முறையாக மீண்டும் திட்டத்தினை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### மீன்பிடி தடைக்காலம் அமல்: நாகை மாவட்டத்தில் மீன்களின் விலை உயர்வு



**நாகப்பட்டினம்,**

மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளதால் நாகை மாவட்டத்தில் மீன்களின் விலை உயர்ந்துள்ளது.

**மீன்பிடி தடைக்காலம்**

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குப்படுத்தும் சட்ட உட்பிரிவுகளின் கீழ் கடலில் மீன்வளத்தைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள கடலோர பகுதிகளில் அடுத்த மாதம் (மே) 29–ந் தேதி வரை 45 நாட்கள் விசைப்படகுகள் மற்றும் இழுவை படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடி தடை காலத்தால் நாகை மாவட்டத்தில் உள்ள மீன்பிடி விசைப்படகுகள், இழுவை படகுகள் கடந்த 15–ந் தேதி முதல் கடலில் மீன்பிக்க செல்லவில்லை. இதனால் மீனவர்கள் தங்கள் விசைப்படகுகளை கடுவையாற்று துறைமுகத்தில் நிறுத்தி வைத்துள்ளனர்.

**கோலா மீன்**

ஆனால் கட்டுமரங்கள் மற்றும் பைபர் படகு மீனவர்கள் மட்டும் கடற்கரையில் இருந்து 30 கிலோ மீட்டர் தூரம் வரை கடலில் சென்று மீன்பிடிக்க செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் உள்ளூர் சந்தையில் மீன்களின் வரத்து குறைந்து காணப்படுகிறது. மேலும் பைபர் படகுகள் மூலம் பிடித்து வரும் மீன்களின் விலையும் உயர்ந்து உள்ளது. மீனவர்கள் ஆழ்கடல் பகுதிக்கு செல்லாததால் கொடுவா, வஞ்சிரம், இறால், நண்டு ஆகியவை கிடைக்கவில்லை. இந்த மாத கடைசியில் கரைகாற்று தொடங்கியதும் கோலா மீன் சீசன் தொடங்க உள்ளது. இது மீன் பிரியர்களுக்கு ஒரு ஆறுதல் அளிக்கின்ற வகையில் உள்ளது.

**மூங்கில்துறைப்பட்டு பகுதியில் கத்தரிக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**



**மூங்கில்துறைப்பட்டு,**

மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் கத்தரிக்காய் பயிரிடுவதில் விவ சாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

**காய்கறி சாகுபடி**

மூங்கில்துறைப்பட்டு பகுதியில் விவசாயம் முக்கிய தொழிலாக நடைபெறு கிறது. இங்கு கரும்பு, எள், நெல், மக்காச்சோளம் ஆகியவை அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதற்கு அடுத்தப்படியாக காய்கறி, பூக்கள் உற்பத்தி செய்யப் படுகிறது.

கடந்த ஆண்டு போதுமான மழை பெய்யாததால் நூற்றுக் கணக்கான ஏக்கர் கரும்பு, நெல் பயிர்கள் காய்ந்து வருகிறது. இந்த நிலையில் வருமானத்துக்கு வழித்தேடி கிணற்றில் இருக்கும் தண் ணீரை பயன்படுத்தி காய்கறிகளை விவசாயிகள் பயிர் செய்துள்ளனர்.

## விலை உயர்வு

கோடை காலம் தொடங்கி யுள்ள நிலையில் கத்தரிக்காய், தக்காளி, வெண்டை ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளது. குறிப் பாக கத்தரிக்காய்க்கு நல்ல லாபம் கிடைப்பதாக காய்கறி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கூறுகின்றனர்.

இருப்பினும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதாலும், வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரிப்பதாலும் செடிகள் விரைவில் வாடிடும் நிலையில் உள்ளது.

## திண்டுக்கல் பூமார்க்கெட்டில் பூக்கள் விலை வீழ்ச்சி

**திண்டுக்கல்,**

திண்டுக்கல் பூமார்க்கெட்டிற்கு பூக்களின் வரத்து நேற்று குறைந்த போதிலும் தேர்தல் நாள் என்பதால் விலை வீழ்ச்சியடைந்தது.

பூமார்க்கெட்

திண்டுக்கல் பூமார்க்கெட்டிற்கு, திண்டுக்கல்லை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் இருந்து பூக்கள் விளைவிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த 15 நாட்களுக்கு மேலாக, அதிகமான வெயில் மற்றும் தண்ணீர் தட்டுப்பாடு இவற்றால் பூக்களின் வரத்து குறைந்து போனது. இதனால் பூக்களின் விலை அதிகபட்சமாக விற்பனை செய்யப்பட்டது.

கடந்த 13-ந் தேதி ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.500-க்கும், கனகாம்பரம் ரு.400, அரளிப்பூ ரூ.200, கோழிக்கொண்டை ரூ.100, முல்லைப்பூ ரூ.350, சம்பங்கி ரூ.350, செண்டுமல்லி ரூ.100, ரோஜாப்பூ ரூ.120-க்கும் விற்பனை ஆனது.

அதனைதொடர்ந்து கடந்த 10 நாட்களுக்கும் மேலாக பூக்களின் விலை இறங்கு முகமாக இருக்கிறது.

விலை வீழ்ச்சி

பொதுவாக பூக்களின் வரத்து குறைந்தால் விலை ஏற்றம் ஏற்படும். ஆனால் இப்போது பூக்களின் வரத்து குறைந்தும் விலை ஏறவில்லை. நேற்று காலையில் ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.170-க்கும், பகல் 1 மணியளவில் 150-க்கும் விற்பனை ஆனது. அதேபோல் ஒரு கிலோ கனகாம்பரம் ரூ.120-க்கும், கோழிக்கொண்டை ரூ.80, முல்லைப்பூ ரூ.150, செண்டு மல்லி ரூ.50, ரோஜாப்பூ ரூ.90, சம்பங்கி ரூ.70-க்கும் விலை வீழ்ச்சியடைந்து விற்பனை ஆனது. இதுகுறித்து பூ வியாபாரி ஒருவர் கூறியதாவது:-

பொதுவாக பூக்களின் வரத்து குறைந்தால் தேவையின் அடிப்படையில் விலை ஏற்றம் ஏற்படும். ஆனால் கடந்த சில நாட்களாக பூக்களின் வரத்து குறைந்திருந்தும் விலையில் ஏற்றம் ஏற்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் முன்பெல்லாம் தேர்தல் என்றால் மாலைகள் அதிகளவில் விற்பனை ஆகும். ஆனால் இப்போது தேர்தல் விதிமுறைகள் உள்பட பல்வேறு காரணங் களால் மாலைகள் அதிகளவில் விற்பனை ஆகவில்லை.அதுமட்டுமின்றி கடந்த சில நாட்களாக முக்கிய விசேஷ நாட்களோ, முகூர்த்தமோ இல்லை. அதனால் விலை ஏற வில்லை. ஆனால் இன்னும் சில நாட்களில் முக்கிய விசேஷ நாட்கள் வருவதால் பூக்களின் விலை ஏறுமுகமாக இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.